பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**09 03 2026** **7 15**

திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. வளர்ச்சித் திட்டங்களை திறம்பட செயல்படுத்துவது குறித்த பட்ஜெட்டுக்கு பிந்தைய இணையவழிக் கருத்தரங்கில் பிரதமர் திரு. நரேந்திர மோடி காணொலி மூலம் இன்று உரையாற்றுகிறார்.

2. பட்ஜெட் கூட்டத்தொடரின் இரண்டாம் கட்ட அமர்வில், மக்களவைத் தலைவர் மீது எதிர்க்கட்சிகள் தாக்கல் செய்துள்ள நம்பிக்கையில்லா தீர்மானம் இன்று விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட உள்ளது.

3. வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கான இளையோர் பங்களிப்பு குறித்த இரண்டாம் கட்ட போட்டிகள் புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது.

4. அசாமில் உள்ளாட்சி அமைப்புகளுக்கான நடப்பாண்டு மானியத்தின் தொகையின் இரண்டாவது தவணையை மத்திய அரசு விடுவித்துள்ளது.

5. மேற்காசிய நாடுகளில் இரண்டாவது வாரமாக தொடர்ந்து போர் நடைபெற்று வரும் சூழலில் ஈரானின் புதிய தலைவராக திரு. **Mojtaba Khamanei** அறிவிக்கப்பட்டுள்ளார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

வளர்ச்சித் திட்டங்களை திறம்பட செயல்படுத்துவது குறித்த பட்ஜெட்டுக்கு பிந்தைய இணையவழிக் கருத்தரங்கில் பிரதமர் திரு. நரேந்திர மோடி காணொலி மூலம் இன்று உரையாற்றுகிறார்.

கல்வி, திறன் மேம்பாடு, சுகாதாரம், சுற்றுலா உள்ளிட்ட துறைகளின் மேம்பாட்டிற்காக பட்ஜெட் அறிவிப்பு குறித்த விவாதங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்த இணையவழி கருத்தரங்கில் அரசு, தொழில்துறை மற்றும் துறைசார்ந்த நிபுணர்கள் பங்கேற்று விவாதிக்க உள்ளனர்.

அரசின் திட்டங்களை திறம்பட செயல்படுத்துவது குறித்தும், வளர்ச்சியை உள்ளடக்கிய நடவடிக்கைகளை துரிதப்படுத்துவது குறித்த பரிந்துரைகள் மற்றும் ஆலோசனைகள் இந்த விவாதத்தில் இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

<<<<>>>> நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரின் இரண்டாம் கட்ட அமர்வு இன்று தொடங்குகிறது.

இந்த கூட்டத்தொடர் அடுத்த மாதம் 2-ம் தேதி வரை நடைபெற உள்ளது.

திரு. ஓம் பிர்லாவை பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்ற எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தாக்கல் செய்துள்ள நம்பிக்கையில்லா தீர்மானம் மீதான விவாதம், மேற்காசியாவில் நிலவி வரும் சூழல் குறித்த வெளியுறவுத்துறை அமைச்சரின் அறிக்கை உள்ளிட்ட பல்வேறு முக்கிய விவகாரங்கள் மக்களவையில் இன்று விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

மாநிலங்களவையில் சுற்றுச்சூழல் அமைச்சகத்தால் பட்டியலிடப்பட்டுள்ள அம்சங்கள் குறித்து விவாதிக்கப்பட உள்ளது.

இந்நிலையில் உறுப்பினர்கள் தவறாமல் அவை நடவடிக்கைகளில் பங்கேற்க வேண்டும் என்று பிஜேபி மற்றும் காங்கிரஸ் கட்சிகள் கொறடா உத்தரவு பிறப்பித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

<<<<>>>>

வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கான இளையோர் பங்களிப்பு குறித்த இரண்டாம் கட்ட போட்டிகள் புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது.

மத்திய இளையோர் நலன் மற்றும் விளையாட்டு அமைச்சகம், மை பாரத் அமைப்புடன் இணைந்து இந்த நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்துள்ளது.

இந்த நிகழ்ச்சியில் தில்லியில் உள்ள **35** கல்லூரிகளைச் சேர்ந்த **10** ஆயிரத்துக்கும் அதிகமான மாணவர்கள் பங்கேற்கின்றனர்.

நாட்டைக் கட்டமைப்பதில் இளையோரின் பங்களிப்பு குறித்த பல்வேறு விவாத அமர்வுகள் இதில் இடம்பெற்றுள்ளது.

இந்தப் போட்டியில் வெற்றி பெறும் மாணவர்கள் வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கான இளம் தலைவர்களின் விவாதப் போட்டி மற்றும் இளையோர் நாடாளுமன்ற போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுடன் கலந்துரையாடும் வாய்ப்பு கிடைக்கும் என்று மத்திய விளையாட்டு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

அசாமில் உள்ளாட்சி அமைப்புகளுக்கான நடப்பாண்டு மானியத்தின் தொகையின் இரண்டாவது தவணையை மத்திய அரசு விடுவித்துள்ளது.

இது தொடர்பாக மத்திய பஞ்சாயத்துராஜ் அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், இரண்டாவது தவணையாக வழங்கப்பட்டுள்ள **256** கோடி ரூபாய் மானியத் தொகையில் முதல் தவணையின் **45** கோடி ரூபாயும் அடங்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மானியம் அம்மாநிலத்தில் உள்ள பஞ்சாயத்து அமைப்புகள், கிராமப்புற உள்ளாட்சி மற்றும் தன்னாட்சி அதிகாரம் பெற்ற மாவட்ட கவுன்சில்கள் ஆகிய அமைப்புகளின் மேம்பாட்டுத் திட்டங்களுக்கு செலவிடப்படும்.

<<<<>>>>

மத்திய கிழக்கு நாடுகளில் போர்ப் பதற்றம் அதிகரித்து வருவதையடுத்து, ஈரானில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் அமெரிக்கா வெளியிட்டுள்ள பதிவில், இப்பகுதியில் கடந்த 2 வாரமாக ட்ரோன் மற்றும் ஏவுகணைகள் மூலம் குடிமக்கள் வசிக்கும் பகுதிகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டு வருவதையடுத்து இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், லெபனானில் உள்ள ஈரானிய படைகளைக் குறிவைத்து இஸ்ரேல் தாக்குதல் நடத்தியுள்ளது.

லெபனான் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 400ஆக அதிகரித்துள்ளது என்று அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

ஈரான் தலைநகர் டெஹ்ரானில் உள்ள முக்கிய உள்கட்டமைப்புத் தளங்களை குறிவைத்து தாக்குதல் நடத்தப்பட்டு வருவதாக இஸ்ரேல் பாதுகாப்புப் படை தெரிவித்துள்ளது.

இஸ்ரேல், அமெரிக்கா, ஈரான் நாடுகளிடையே இரண்டாவது வாரமாக தொடர்ந்து போர் நடைபெற்று வருகிறது.

ஈரான் நடத்திய தாக்குதலில் 16 ஏவுகணைகள் மற்றும் 113 ட்ரோன்கள் வான்பாதுகாப்பு அமைப்பு மூலம் வீழ்த்தப்பட்டதாக ஐக்கிய அரபு எமிரேட்ஸ் தெரிவித்துள்ளது.

ஈரான் மீது நடத்தப்பட்டு வரும் தாக்குதலை நிறுத்துவதற்கான வாய்ப்புகள் இல்லை என்று அமெரிக்க திரு. டோனல்ட் ட்ரம்ப் கூறியுள்ளார்.

இந்தப் போரில் இதுவரை ஈரானைச் சேர்ந்த ஆயிரத்து 230 பேரும், இஸ்ரேலைச் சேர்ந்த 11 பேரும், அமெரிக்க ராணுவத்தைச் சேர்ந்த 6 வீரர்களும் உயிரிழந்துள்ளனர்.

இதனிடையே சவுதி அரேபியாவின் பல்வேறு பகுதிகளில் வசித்து வரும் இந்திய வம்சாவளியினருக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் இந்தியா வழங்கும் என்று அந்நாட்டுக்கான இந்திய தூதர் டாக்டர் Suhel Ajez Khan தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் மேற்காசியாவில் நிலவி வரும் சூழல் காரணமாக அங்கிருந்து இந்தியாவிற்கு இயக்கப்படுவதாக இருந்த **49** விமான சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக மத்திய சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் ஈரானின் புதிய தலைவராக திரு. **Mojtaba Khamanei** பொறுப்பேற்க உள்ளதாக அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.

<<<<>>>>

மேற்குவங்க மாநிலத்தின் எல்லைப் பகுதியில் பங்களாதேஷை சேர்ந்த **2** குற்றவாளிகளை அம்மாநில காவல்துறையின் சிறப்பு பிரிவு அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

பங்களாதேஷில் உஸ்மான் ஹாதி கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள இவர்கள், டாக்காவில் இருந்து இந்தியாவிற்கு தப்பி வந்துள்ள நிலையில், மீண்டும் அவர்கள் பங்களாதேஷுக்கு தப்பிச் செல்ல முயன்றபோது காவல்துறையால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் நீதிமன்றத்தின் முன் ஆஜர்படுத்தப்பட்டு பின்னர் விசாரணைக்காக காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

<<<<>>>>

நாடு முழுவதும் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டிருந்த அமைப்புகளின் முயற்சிகளை போதைப்பொருள் தடுப்பு வாரிய அதிகாரிகள் முறியடித்துள்ளனர்.

கல்கி என்ற பெயரில் போதைப்பொருள் தடுப்பு வாரிய அதிகாரிகள் நடத்திய சோதனை நடவடிக்கைகளில் ஏராளமான போதைப்பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டதாக போதைப் பொருள் தடுப்பு வாரிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக அந்த வாரியம வெளியிட்டுள்ள அறிக்கையில் கடந்த 2025ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் இதுவரை ஆயிரத்துக்கும் அதிகமான போதைப்பொருள் கடத்தல் சம்பவங்கள் முறியடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

உலகக் கோப்பை ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில், இந்தியா வெற்றி பெற்று சாதனை படைத்துள்ளது.

அஹமதாபாத்தில் நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில், இந்தியா 96 ரன் வித்தியாசத்தில் நியூசிலாந்தை வென்று மூன்றாவது முறையாக கோப்பையை கைப்பற்றியுள்ளது.

முதலில் பேட் செய்த இந்தியா நிர்ணயிக்கப்பட்ட **20** ஓவரில் **5** விக்கெட் இழப்புக்கு **255** ரன் எடுத்தது.

இதனையடுத்து, **256** ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு பேட் செய்த நியூஸிலாந்து **20** ஓவரில் **159** ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

ஜஸ்ப்ரீத் பும்ரா ஆட்ட நாயகனாகவும், சஞ்சு சாம்சன் தொடர் நாயகனாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மூன்றாவது முறையாக டிவெண்ட்டி டிவெண்ட்டி கிரிக்கெட் உலகக் கோப்பையை வென்று சாதனை படைத்துள்ள இந்திய அணிக்கு குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதா கிருஷ்ணன், பிரதமர் திரு நரேந்திர மோடி, உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் உள்ளிட்ட தலைவர்கள் பலர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

குடியரசுத்தலைவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், இந்திய அணி தனது திறமையை வெளிப்படுத்தியுள்ளது, மகிழ்ச்சியாகவும், பெருமை அளிப்பதாகவும் உள்ளது என்று தெரிவித்துள்ளார்.

குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், இந்திய அணி சிறப்பான திறமையை வெளிப்படுத்தி வரலாற்றுச் சிறப்புமிக்க சாதனையை வெளிப்படுத்தியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

மூன்று முறை ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் உலகக் கோப்பையை வென்ற முதலாவது அணி என்ற பெருமையை இந்திய அணி பெற்றுள்ளது நாட்டிற்கு பெருமையளிப்பதாக உள்ளது என்று திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், இந்திய அணியின் இந்த வெற்றி, வீரர்களின் சிறப்பான திறன், மனஉறுதி மற்றும் அணியின் கூட்டு முயற்சிக்கு கிடைத்துள்ள வெற்றி என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த வெற்றி ஒவ்வொரு இந்தியரின் மனதில் பெருமையையும், மகிழ்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது என்று பிரதமர் தெரிவித்துள்ளார்.

குடியரசுத்தலைவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், இந்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், இந்த உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டித் தொடர்

முழுவதும் இந்திய அணி, தனது முழு திறனை வெளிப்படுத்தி நாட்டிற்கு பெருமை சேர்த்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின், இந்திய அணி மகத்தான வெற்றியைப் பதிவு செய்துள்ளதாக கூறியுள்ளார்.

தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன், நியூசிலாந்துக்கு எதிரான உலகக் கோப்பை கிரிக்கெட் இறுதிப் போட்டியில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி **3** முறை கோப்பையை வென்ற ஒரே அணி என்ற பெருமையை இந்தியா பெற்றுள்ளதாக தெரிவித்துள்ளார்.

----------------

உலக கோப்பை தகுதிச் சுற்று மகளிர் ஹாக்கி போட்டியில் இந்தியா இன்று ஸ்காட்லாந்த்தை எதிர்கொள்கிறது.

முன்னதாக ஹைதராபாதில் நேற்று நடைபெற்ற போட்டியில், இந்தியா **4-0** என்ற கோல்கணக்கில் உருகுவே-யை வென்றது.

**<<<<The End>>>>**